## *Rapid Transit System for Madras*

* *Q. No.* 429—THIRU K. ABDUL LATHEEF : Will the Hon. the Minister for Labour be pleased to state :—

(a) whether the Tamil Nadu Government has impressed on the Central team of Officers on the 4th May 1978 about the need to take up the Rapid Transit System of Madras for execution, and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (ஆ): மத்திய வீட்டு வசதித் துறையின் செயலாளரின் தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயற்படுத்தப் படும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் பற்றி, 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 4-ந் தேதி தமிழ்நாடு தலைமைச் செயல கத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின்போது, சென்னை விரைவுப் போக்குவரத்துத் திட்டம் இன்னும் மத்திய திட்டக் குழுவினால் அனுமதிக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப் பட்டது. இந்த விஷயம் திட்டக் குழுவின் உயர்மட்ட அதிகாரி களால் ஆராயப்படுகிறதென்றும், இந்தத் திட்டம் பற்றி மத்திய திட்டக் குழுவிடம் தானே நேரடியாக தொடர்பு கொள்வதாகவும் கூட்டத் தலைவர் கூறினார்.

[முற்பகல் 9-40]

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, மத்திய அலுவலர் குழுவிடம் சிபார்சு செய்த அம்சங்களில் எவை எவை ஏற்றுக் கொள்ளப்பட்டன? எந்தெந்த அம்சங்கள் நிராகரிக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒரே திட்டம் அது. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

(பதில் இல்லை).

## தூத்துக்குடி கடற்கரை சாலையில் கட்டிடங்கள்.

* வினா எண். 430—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தூத்துக்குடி புதிய துறைமுகம் செல்லும் கடற்கரைச் சாலையில் கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி தனியார்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

1979 மார்ச் 16]

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அய்ந்து நபர்களிடமிருந்து கட்டிடம் கட்ட தூத்துக்குடி நகரசபை ஆணையருக்கு அனுமதி கோரி விண்ணப்பங்கள் வந்தன. அவை யாவற்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ந. தனசேகரன் : அது நீண்ட கடற்கரைச் சாலையாதலால் அரசுக்குச் சொந்தமான இருபுறங்களில் உள்ள நிலங்களில் அரசு அலுவலகங்களைக் கட்ட முன்வருமா ? அவற்றில் தனியார்களுக்கு கட்டடங்கள் கட்ட அனுமதிப்பதால் கடற்கரைச் சாலையின் அழகே கெட்டுவிடும் சூழ்நிலை உருவாகும் என்பதால் தனி நபர்களுக்குக் கொடுக்கப்பட்ட அனுமதிகள் ரத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கொடுத்த அனுமதியை ரத்து செய்வதற்கு ஆலோசனை இல்லை. அரசாங்க அலுவலகங்கள் கட்டுவதாக இருந்தால் அதை ஆலோசனை செய்யலாம்.

திரு. ந. தனசேகரன் : துறைமுகப் பகுதியாக இருப்பதால் பம்பாயில் இருப்பதுபோல் பெரிய பெரிய கட்டடங்களைக் கட்ட அந்த இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. மத்திய அரசுக்குச் சொந்தமான நிலமாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்குக் கூட இதைக் கட்டுவதற்கு அனுமதி தருவதாகத் தெரியவில்லை. நாம் சிறிய கட்டடங்களைக் கட்ட அனுமதி கொடுப்பதால் அங்குள்ள அழகு கெட்டுவிடக்கூடாது என்பதால் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த அனுமதிகளை தாற்காலிகமாக ரத்து செய்ய மறு பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இவைகளையெல்லாம் ஆராய்ந்துதான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ரத்து செய்வதற்கு உத்தேசமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் புதிய துறைமுகம் அமைக்கப்பட இருக்கிறது. வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் வரப் போகிறார்கள். பல அற்புதங்கள் நிகழப் போகின்றன. அப்படிப்பட்ட இடத்தில் தனியார்களுக்கு இடமளித்து வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டால் அந்தச் சாலை, அங்குள்ள அற்புதங்கள் கெட்டுவிடாதா என்பது பற்றி அரசு மறு பரிசீலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வீடு கட்ட அனுமதி கொடுத்திருப்பது துறைமுகத்தில் அல்ல, துறை முகச் சாலையிலே.

திரு. வி. கே. கோதண்டராமன் : அனுமதி கோரி எந்த ஆண்டு விண்ணப்பித்தார்கள் ? எப்போது அனுமதி கொடுக்கப் பட்டது ? எந்த அடிப்படையில் உடனே கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது ஒரு நீண்ட பட்டியல். அதைப் படித்தால் 15 நிமிடங்களாகும். விண்ணப் பித்த நாள் : 10—10—1977. அனுமதி கொடுத்த நாள் : 3—11—1977. 7—11—1977, 6—12—1977, 21—9—1977, 3—11—1977, 7—4—1978, 20—4—1978, முதலில் சொன்னவை கேட்ட நாட்கள், அடுத்தபடியாகச் சொன்னவை கொடுத்த நாட்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 431 432 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

## கல்லணை விரிவாக்கக் கால்வாய்.

*வினா எண். 433—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கல்லணை விரிவாக்க கால்வாய் பகுதியை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : சோற்றாலும் மடை அடைக்கும் சோழ வள நாடு—அந்த நாட்டினுடைய விஷயம் இது. கல்லணை வாய்க்கால் சீரமைப்பு பற்றியும் மன்னார்குடி வாய்க்கால் பற்றி யும் விரிவாக்கம் பற்றியும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை விரிவாக்கம் செய்யாவிட்டால், தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிட முடி யாது. ஆகவே இதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அன்போடு வினவி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சோழவளநாடு சோறுடைத்து என்ற முதுமொழி இந்த அரசுக்கும் தெரியும். கல்லணை வாய்க்கால் விரிவாக்கத் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட் டார்கள். காவேரி மேட்டூர் விரிவாக்கத் திட்டத்தின் மூலம்